REGD No M 4642

# திராவிட நாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 || 4—5—52 || இதழ் 44

## வாலாஜா
# தி. மு. க. தோழர்களுக்கு

...ங்கார்த்த மாவீரர்காள்!

...லை நிமிர்ந்து நடந்தேன்—நோய் ... ஓய்வு எடுத்துக் கொண்டது— ...மை உணர்ச்சியால் உந்தப்பட்டு ...சம் தயை தாட்சணியத்துக்குக் ...டுண்டு கொள்கைகளை ... ...மல், உறுதி எவர் உள்ளத்தி... பாராட்டுதலைக் கிளறும் வித...க் கொண்டு, திராவிடம் களிக்க ... அத்திரு நாட்டின்மீது தீரா...த்தைக் கக்கும் திருப்பணி...துவரும் தீய நோக்கினர் கலங்...ம், அறத்தினை ஓம்புவோர் மகிழ... அதனை மறந்தோர் மருளவும், ...சியல் வட்டாரங்கள் ஆச்சரியப்...வும், அரசியலைத் தமக்குச் சுய ...வட்டாரமாக்கிக்கொள்ளும் சூது...பினர் வேதனைப்படவும், அன்று ...கள், அறப்போர்க்களத்திலே ...மையுடன் நின்று வென்ற ...ந்தி கேட்டேன்—தலைநிமிர்ந்து ...ந்தேன்.

...ன்று 'கருப்புக் கொடி' காட் ... செயலைத்தான் குறிப்பிடு...றன்.

மந்திரி மாணிக்கவேலர் — நமது ...பர், அவருடைய வெற்றியை ... வெற்றியாகக் கருதினோம்— ...த்தோம். அவருடைய வெற்...காக அரும் பாடுபட்டோம் — ...னைப் பெருமையாகக் கொண் ...டோம். நாம், இரும்புப் பெட்டிக் ...ன்ன—நல்ல இதயம் கொண்டவர்கள் — எனவே அவருக்காகப் பாடுபட்டு, பலன் கிடைத்ததும், அவர் சென்னை சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பூரிப்படைந்தோம் — மார் தட்டி நின்றோம், அரசியல் மாற்றுக் கட்சிக்காரர்களைக் கண்டு, முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதி காணீர்! உழைப்பாளிச் சமூகத்தின் தலைவருக்குக் கிடைத்த வெற்றியினைக் காணீர்! மாணிக்கவேலரின் மகத்தான வெற்றியினைக் காணீர்!— என்று சிந்து பாடினோம். இந்த 'ஆனந்தக் களிப்புக்காக' சந்து முனைச் சச்சரவினர், கனைத்துக் கலகம் விளைவிப்போர், கல் வீசிச் சொல்லை மறைக்க முயல்வோர் எனும், பல திறத்தினரின், எதிர்ப்புகளை, ஏளனங்களை, ஏசலைத் தாங்கிக் கொண்டோம்—உழைத்தோம் —அவர் வெற்றி அடைந்ததும், உள்ளம் மகிழ்ந்தோம் — ஊராருக்கும் உரைத்தோம்.

அவருக்குக் கருப்புக் கொடி காட்டித் தீரவேண்டிய நிலை பிறந்தது—அதை எண்ணும் போது, உண்மையாகவே வருந்துகிறேன். என் செய்வது, நாம், தொடர்ந்து மகிழ்ச்சியைப் பெறுவதைத் தடுக்க, களிப்பைக் கருகிய மொட்டு ஆக்குவதற்காக, 'சாணக்கியாஸ்திரம்' கிளம்பிற்று—இதோ, யாருடைய வெற்றிக்காக நாம் [illegible] யாருடைய வெற்றியைக் [illegible] களித்தோமோ, யாருடைய பெயர் செந்தேன் போல் இனிப்பு அளித்ததோ, அவருக்கு, நாம், கருப்புக் கொடி காட்டவேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது — ஒரு தந்திரக்காரரின் போக்குக்கு, நாடு, இடம் கொடுத்துவிட்ட காரணத்தால்.

மாணிக்கவேலர், M. L. A. ஆனார்—மகிழ்ந்தோம்.

மாணிக்கவேலர் மந்திரி ஆக்கப்பட்டார்—மருண்டோம்.

மாணிக்கவேலருக்கு, 'வெற்றி மாலை' சூட்டி மகிழ்ந்தோம்.

மந்திரி மாணிக்கவேலருக்குக் கருப்புக் கொடி காட்டும், வேதனையை நாம் அடைந்து தீரவேண்டி நேரிட்டுவிட்டது, அரசியலிலே ஒரு ஆபத்தான மனிதர் நுழைந்து நடாத்திய திருவிளையாடலால்!

எவருக்காக, பட்டி தொட்டிகளிலே எல்லாம் சென்று, பாணி பாடினோமோ, எவருடைய அறிவையும் ஆற்றலையும், எதிர்க்கட்சியினரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தோமோ, எவருடைய முகத்திலே வெற்றிக்களை தெரிவதற்காக நமது முகத்திலே வியர்வையைப் பொழிய வைத்துக் கொண்டோமோ, அவருக்கு, நமது நண்பருக்கு, நமது உழைப்பைக் காணிக்கையாகப் பெற்று ஊராளும் மன்ற உறுப்பினராக்கப்பட்டவருக்கு, "எந்தக் கரங்கள், மாணிக்கவேலருக்கு ஓட்டு அளியுங்கள்! மாட்டுப் பெட்டியிலே மண்போடுங்கள்!—என்ற தட்டிகளைத் தூக்கினவோ, அதே கரங்கள்—எந்தக் கரங்கள் அவருக்கு [illegible] [illegible]

# காகபட்டரிடம் சிவாஜி பணிந்திடும் காட்சி

அதே கரங்கள், கருப்புக்கொடிகளை ஏந்தின! வருக! வருக! — என்று வாழ்த்தினோம், உள்ளன்போடு—முகமலர்ச்சியுடன்—திருப்பிப்போ! திரும்பிப்போ!—என்று முழக்கமிட வேண்டி வந்தது, தாங்கமுடியாத வேதனையைத் தாங்கிக்கொண்டு! மாணிக்கவேலர் மந்திரி ஆக்கப்பட்டார்—நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டார்! கண்டெடுத்த தங்கத்தைக் கருப்புக் கண்ணாடியார் தட்டிப் பறித்துக்கொண்டார்! ஏழை எளியவருக்காகச் சீறிப் போரிடும் சிங்கம் என்பதால் சித்தம் களித்தோம், அந்தச் சிங்கத்தைப் பதவிக் கூண்டிலே போட்டு அடைத்துவிட்டார், பார்ப்பனீயத்தின் கடைசி பாதுகாவலர்! மாணிக்கவேலர் கிடைத்தார் நமக்கு—குணத்திலே, தரத்திலே மாணிக்கம் என்று மகிழ்ந்தோம்—திராவிடத்தின் எதிரிகளைத் தாக்கும் 'வேலர்' என்று களித்தோம், மாணிக்கவேலரை மாம்பலத்தார் அபகரித்துக் கொண்டார் — மலர்ந்த முகம்—நமக்குக் கிடைத்த பரிசு, தேர்தலின்போது ஆயிரம் தொல்லைகளைத் தாங்கிக் கொண்ட நமக்கு—அந்த மலர்ந்த முகத்தின் பொலிவுகண்டு பொறுக்கவில்லை, போலி வேதாந்திக்கு, நமது கண்களிலே வேல் கொண்டு குத்தி, வேதனையை மூட்டிவிட்டார், ஆச்சாரியார். நம்மைக் கொண்டே நமது மாணிக்கவேலருக்குக் கருப்புக்கொடி காட்டச் செய்துவிட்டார்! ஒருகல், இரண்டுபழம், என்பார்கள்—இது, அது அல்ல—ஒரு செயல், அதன் விளைவாக, எத்துணையோ வேதனை. திராவிடக் குடும்பத்திலே இருந்த ஒரு தீரரைச் சிறைபிடித்துக்கொண்டு சென்றுவிட்டார் —குடும்பத்துக்கு நஷ்டம்—கஷ்டம் — அவருக்கோ, மிக்க மகிழ்ச்சி—மாணிக்கவேலரை, அவருடைய நண்பர்களிடமிருந்து, ஆதரவாளர்களிடமிருந்து பிரித்துவிட்டேன்—குடும்பப் பாசத்தைக் குலைத்துவிட்டேன் — அதிகம் செலவுகூட இல்லை—ஒரே ஒரு மந்திரி வேலையை வீசினேன் — குடும்பம் சீர்குலைந்து கிடக்கிறது— தேர்தலின்போது குலவினார்களே, அவர்கள் இன்று குமுறுகிறார்கள் காணீர் என்று கூறும்படி கூறி நம்மைக் குத்துகிறார், குல்லூகப் பட்டர்.

"இந்த மாணிக்கவேலர்கள் எல்லாம் ஏன் காங்கிரஸ் மகாசபையை எதிர்க்கிறார்கள் தெரியுமா — பதவி மோகம்! இவர்களெல்லாம் எப்படிப் பட்டவர்கள் தெரியுமா? பட்டம் பதவி கிடைத்த பக்கம் பல்லிளித்துச் செல்பவர்கள்! இவர்களை எல்லாம் எமது தேசிய மகாசபை மட்டந்தட்டி வைத்திருந்தது — அந்தக் கோபம், வயற்றெறிச்சல், பதவி ஆசை, காரணமாகத்தான் இந்த மாணிக்கவேலர்கள், காங்கிரசை எதிர்த்துத் தேர்தலிலே நிற்கிறார்கள்"

சொன்னார்களே. நமது காதுகளில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோலிருந்ததல்லவா, இந்தச் சொற்கள்—தேர்தலின்போது, காங்கிரஸ் பிரசாரகர்கள் பேசியபோது.

எத்துணை வீரத்துடன் — வீரம் கூடக்கிடக்கட்டும்— எத்துணை நம்பிக்கையுடன் நாம், மார்தட்டிக்கூறினோம் மேடை அதிரும் வண்ணம், "எமது மாணிக்கவேலருக்கா பதவி மோகம்! பித்தனே! பேசாதே அது போல்!! அவருடைய அறிவும் ஆற்றலும் அறியாததால், ஏதேதோ ஏசிப் பேசுகிறாய், அவர் நாடு வாழவும் கேடு வீழவும், ஏழை வளமாகவும் எத்தர் தொலையவும், பாடுபடும் அறப்போர் வீரர் — பதவிக்காகப் பல்லை இளிப்பவர் அல்ல"—என்று எத்தனை எத்தனைமுறை கூறினோம் —அப்பதிலுரைகள் ஒவ்வொன்றும் படமெடுத்தாடும் பாம்பாகி வந்தல்லவா, நமது இதயத்தைக் கடிக்கின்றன இன்று — நம்மை மறந்து, நமது குடும்பத்தின் நலனை மறந்து, ஆச்சாரியாரின் முகாமுக்குள் நமது மாணிக்கவேலர் இழுத்துக்கொள்ளப்பட்டார் என்று செய்தி வந்ததும், எவ்வளவு வேதனை! எத்துணை வெட்கம்! இதுவா மாணிக்கவேலரிடம் நாம் எதிர்பார்த்தபரிசு! இதுவா நமது நேசத்தின் விளைவு!

எவ்வளவு ஏளனப்பார்வையுடன் காங்கிரசார், கண்டனர், மந்திரி கும்பலின் படத்தைப் பத்திரிகைகள் வெளியிட்டனர்! எத்தனைவிதமான கேலிப்பேச்சு, மாணிக்கவேலர், 'கனமான' துபற்றி! நாம் எதிர்பார்த்தது என்ன—வெற்றிக்குப் பிறகு
ஆச்சாரியார் ஆனந்தமாக அம
திருக்க, அவர்பக்கத்திலே வடநா
டுக்காங்கிரஸ்காரர் கவர்னராக
கொலுவீற்றிருக்க, பின்புறத்தி
மாவீரர் மாணிக்கவேலர், நின்
திருக்கோலத்தில் காட்சிதரும்பட
வெளிவந்ததே அந்தப்படம், சரித
திலே உள்ள சோகச் சித்திரமா
காகபட்டரிடம் சிவாஜி பணி
திடும் காட்சியை அல்லவா நினைவி
ற்கொண்டுவந்தது — கண்களில்
நீரும், நெஞ்சிலே நெருப்புப மூ
டதே. ஆஹா! எவ்வளவு மகிழ்
தோம். மாணிக்கவேலரின் வெற்
கண்டு! எவ்வளவு சுலபமாக, வே
னையை மூட்டிவிட்டார் ஆச்சாரியா
அதே மாணிக்கவேலரைக்கொண்
வல்லவனுக்குப் புல்லும் ஆயு
மாமே—உண்மையாகத் தா
போயிற்று—இதோ மாலைக்காக
முன் மகிழ்ச்சியுடன்நின்ற மாணி
வேலருக்கு, கருப்புக்கொடி காட்
வைத்துவிட்டாரே, ஆச்சாரியா
பத்தோடு பதினொன்று என்றமுன
யிலே மாணிக்கவேலரைப் பத
யில் அமரச்செய்து! மாணிக்கவே
ருக்கும் நமக்கும் எவ்வளவுமகிழ்
கரமான 'நேசம்' உருவாயிற்
சுந்தரமாகவளர்ந்துசெல்லும்தோ
யைக் கவிழ்த்துவிடும் சுறுபோல
கிளம்பினாரே, சுந்தரகாண்ட பா
யணப்பிரியான ஆச்சாரியா
நேசத்தை நாசமாக்கி விட்டா
மாணிக்கவேலருக்கும் நமக்கு
இடையிலே மனமாச்சரிய மடுவை
வெட்டிவிட்டாரே! இதைஎண்ணு
போது, உள்ளம் வேதனைப்படுவ
மட்டுமல்ல, வெட்கம் பிறிட்டு வ
வதுமட்டுமல்ல, எவ்வளவு ஆ


**விளம்பரம்**

A. K வேலன் எழுதிய
இலட்சியக் கனவு 0—6—
புத்தன் தொடுத்த போர் 0—6—
எமது அடுத்த வெளியீடு
புலிகேசி எழுதிய
கண்பூஷியஸ் (அச்சில்)
கழிவு 25% செலவு இனம்
**ஜெகதா பதிப்பகம்**
தெப்பக்குளம், திருச்சி

# தூற்றியதே காங்கிரஸ் அணைக்கிறாரே இவர்!

...ன மனிதர் ஆட்சிப்பீடம் ஏறி இருக்கிறார் என்பது புரிகிறதே, ...ச்சம்கூடக் கிளம்புகிறதே! நினைத் ...லே நெஞ்சு நோகும் நிலை அல் ...வா! மாணிக்கவேலர் யார்? நாம் ...ார்? எப்படிப்பட்ட 'நேசம்' ...லர்ந்தது — எவ்வளவு இலேசாக அதனை நாசமாக்கிவிட்டார் ஆச்சா ...ியார், நண்பர் மாணிக்கவேலரைக் ...கனமாக்கி'. தோடோ தொங்கட் ...டமோ செய்து, குழந்தைக்குப் ...போட்டு மகிழலாம், என்று பூரிப் ...ான வைரத்தை வாங்கிவரும் சீமா ...னுக்கு, அதே வைரத்தைப் பொடி ...ாக்கித் தீயவன் ஒருவன், உள்ளுக் ...குக்கொடுத்துவிட்டால் — என்ன ஆகும்! மாணிக்கவேலரின் வெற்றி, ...வைரம்போல், ஒளிவிட்டது! திரா ...விடம் களித்தது! ஆச்சாரியார் அந்த வெற்றி வைரத்தைத் தூளாக்கித் ...ிராவிடத்துக்குத் தருகிறாரே, என் ...னென்பது! இவ்வளவும் செய்து ...விட்ட ஆச்சாரியார், இதைவிடப் ...பமே மேல் என்று பேசிக்கொண்டு ...வனி வருகிறார், இங்கே நாமோ, ...வேதனையில் தள்ளப்படுகிறோம்.

"என்னமோ இந்தப்பயல்களெல் ...லாம் ஓடி ஆடிப் பாடுகின்றன, ஓங் ...காரக் கூச்சலிட்டு ஆங்காரப்பேச் ...சுப் பேசி அலைந்து திரிகின்றன, ...மாணிக்கவேலருக்காக — கடைசி ...யில், அவர், 'இதுகளை'ச் சட்டை ...செய்யப்போவதில்லை. எங்கே பதவி ...கிடைக்கிறதோ அந்தப்பக்கம் பாய் ...வார், இதுகளின் முகத்திலே கரி ...பூசப்போகிறார், பார், பார்!" — ...என்று காங்கிரசார் சிலர் பேசிய ...போது, எரிச்சலாக இருந்தது — ...இன்று அதை எண்ணிக் கொண் ...டாலே வேதனையாக இருக்கிறதே!

...நம்மை எல்லாம் இவ்வளவு வேத ...னைக்கு ஆளாக்கினாலும் பரவா ...யில்லை. ஒரு மந்திரி வேலை கிடைத் ...தால் போதும் என்று எண்ண ...வேண்டிய நிலையா, மாணிக்கவேல ...ருக்கு! இல்லையே!! அறிவாற்றல் ...உள்ளவர் — அனுபவம் உள்ளவர் — ...இன்றைய மந்திரிகளிலே பலர் அர ...சியல் அரிச்சுவடி படித்துக் கொண் ...டிருந்த காலத்திலேயே, மந்திரி ...சபையிலே பார்லிமெண்டரி 'செகர ...டரி'யாக இருந்தவர் — பஞ்சத்தில் ...அடிபட்டவரல்ல! பதவிப்பசி எடுத் ...துத் தீரவேண்டிய அளவு, அலைச் ...சல் பட்டவருமல்ல!' எனினும், நம்மை வேதனையிலாழ்த்திவிட்டு, மந்திரியானார் — ஏன் — என்ன காரணம்? காரணம் தெரியவில்லையா, என்று கேட்கிறார், 'கண்ணன் காட்டிய வழி' ஆசிரியராம் ஆச்சாரியார்! 'என்ன பொடி போட்டாரோ' என் பார்களே ஊரில், அதுபோல, என்ன சொன்னாரோ ஆச்சாரியார், கவிழ்த்தே விட்டார், மாணிக்க வேலரை!

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது, ஆள் தான் இறந்துவிட்டான் — என்பதுபோல, காங்கிரசை முறியடித்தார் மாணிக்கவேலர். ஆனால் காங்கிரஸ் மந்திரிசபையிலே அவரும் ஒரு மந்திரியானார், என்றல்லவா, ஆகிவிட்டது. வடாற்காடு மாவட்ட முழுவதையும் அடக்கி, மடக்கி விட்டேன், அங்கு, நமக்கு அருமையான 'வக்கீல்' கிடைத்து விட்டார், பீசும் சாதாரணந்தான், மாதம் இரண்டாயிரத்துக்கு மேலாகாது, என்றல்லவா, ஆச்சாரியார் எண்ணுவார்!

அவா இரண்டு பேரும் சேர்ந்துண்டு, ஒரே அமக்களப்படுத்தினா, வடாற்காடிலே, இப்போ, அவாளுக்குள்ளே, 'சிண்டு' முடிந்தாச்சி, பார் வேடிக்கையை! எலக்ஷனிலே, மாணிக்கவேலரும் அவரோட நண்பர்களும் நம்ம காங்கிரசுக்குத் தொல்லை கொடுத்தாளேன்னோ, இனி பார், அவாளுக்குள்ளாகவே வாக்குவாதம் கிளம்பும்! நம்ம காங்கிரசுக்கு நல்ல சான்சு!! — என்றல்லவா ஆச்சாரியார் களிப்படைவார்!

இவைகளை எல்லாம் எண்ணி எண்ணி ஏக்கம்கொண்ட இலட்சியவாதிகள் தான், நண்பரானாலும் நம்மவரானாலும், அறிவாற்றலுள்ளவரானாலும், நம்மை மறந்து நம்மைத் துச்சமென மதித்து, பொது மக்கள் நம்மைச் சேவலமாகக் கருதும் விதமாக, எதிரி முகாமில் இடம் பிடித்துக் கொண்ட மாணிக்கவேலரை, நாங்கள் கண்டித்தே தீருவோம், எமது வெறுப்பைக் காட்டியே தீருவோம். அவ்விதம் செய்தால் மட்டுமே, எமது 'மானம்' தப்பிப் பிழைக்கும். நாட்டிலே ஜனநாயகம் தழைக்கும், பொதுவாழ்விலே தூய்மை நிலைக்கும், கொள்கைக்கு ஊறு ஏற்படாமல் இருக்கும், அறநெறி தெளிவாகும், என்று எண்ணிய இளைஞர்கள் தான், அன்று, கருப்புக் கொடி காட்டி, தங்கள், கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டனர்!

கருப்புக்கொடி மாணிக்கவேலர் முன்னிலையில் காட்டப்பட்டது, என்றாலும், அது, ஆச்சாரியாருக்கு நாம் அளிக்கும் கண்டனமே ஆகும். ஆச்சாரியாரே! எமது அன்பரும் நண்பருமான மாணிக்கவேலரை எம்மிடமிருந்து பிரித்துவிட்டீர்! உமது சூது எமக்குத் தெரியும்! அதை அம்பலப்படுத்துவது இந்த கருப்புக்கொடிகள் மாணிக்கவேலரை மந்திரியாக்கிவிட்டால், காங்கிரஸ் எதிர்ப்பாளர்களை, திராவிடர்களை, மயக்கிவிட்டதாக எண்ண வேண்டாம்! ஆர்வத் தீ, கொழுந்துவிட்டு எரிந்தவண்ணம் இருக்கிறது. உம்முடன் சேர்ந்ததால் மாணிக்கவேலருக்கும் எமது கண்டனத்தை தெரிவிக்கிறோம் — என்று அன்று பறந்த நூற்றுக்கணக்கான கருப்புக் கொடிகள் கூறின!!

ஆச்சாரியார் போட்டிருக்கும் கணக்கு, தவறானது.

மாணிக்கவேலர் மந்திரியாக வேண்டும், அந்த ஒரு காட்சியைக் கண்ணால் கண்டுவிட்டால் போதும், புழுத்தசோளமும் உளுத்த அரிசியும், துப்பாக்கி தர்பாரும் தொல்லை தரும் துரைத்தனமும், எது கிடைத்தாலும் மக்கள் சகித்துக்கொள்வார்கள், வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில். ஆட்சியின் அலங்கோலங்களைக் கண்டு, மக்கள்

## வாலாஜா வழக்கு

2—5—52 அன்று வாலாஜாவில் கருப்புக்கொடி காட்டிய குற்றத்திற்காகத் தோழர்கள் கச்சபாலையம், சின்னப்பன், தடையுத்தரவைமீறிய குற்றத்திற்காக, தோழர்கள் அன்பெழிலன், இரண்யதாசன், நாகரத்தினம் ஆகியோர்மீது வழக்குபதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெறுமென தெரியவருகிறது.

# "நரிக்கு, நகாரா கொட்டுகிறது, புலி!"

ஆத்திரப்பட்டால், மாணிக்கவேலரை மந்திரியாக்கினேன், போதாதா, திருப்தி இல்லையா, என்று சாகசமாகப் பேசலாம், என்று ஆச்சாரியார் கருதுகிறார். மிக மிகத் தவறான கணக்கு!

தேர்தலிலே காங்கிரசை முறியடித்து வெற்றி முரசு கொட்டியவர் மாணிக்கவேலர்! அவருக்கு, மந்திரிவேலை தந்தவர், தேர்தலிலே தலைகாட்டாத ஆச்சாரியார்!

பெருமைக்குரியதா இது!

மாணிக்கவேலர், அறிவாற்றலுள்ளவர், அனுபவசாலி, எனவே, அவரை நிர்வாகத்துக்கு இழுத்துக் கொண்டேன் என்று காங்கிரஸ்கூற முடியாது. ஏனெனில் தேர்தலின் போது, காங்கிரஸ், மாணிக்கவேலர் மேதாவியாகக்கூட இருக்கலாம், ஆனால் அவர் காங்கிரஸ்காரர் அல்ல, ஆகவே அவருக்கு 'ஓட்' அளிக்காதீர் என்றுதான் 'கர்ஜனை' செய்தனர்.

அறிவாற்றலுள்ளவர், ஆனால்காங்கிரசால் எதிர்க்கப்பட்டவர்.

அறிவாற்றலுள்ளவர், காங்கிரசை முறியடித்தவர், அவர்மட்டுமல்ல— அவர்போலப் பலர் — பலப்பலர்! அவர்களின் தொகை, பெருவாரியானது! வெற்றிபெற்ற காங்கிரசாரின் தொகையைவிட அளவிலே பெரிது—எனவே, நாட்டை ஆளும் உரிமை பெற்றது — அந்த உரிமை பெற்ற குழுவிலே உள்ளவர் மாணிக்கவேலருக்கு, மெஜாரடி பெறமுடியாதுபோன காங்கிரஸ், மந்திரிவேலை தருகிறதாம்!! பெருமைக்குரியதா இது? மாணிக்கவேலரின் உண்மை நண்பர்கள், இதனை அவருக்கோ, நண்பர்களுக்கோ, பெருமை தருவது என்று எண்ண முடியும்.

மக்கள் அளிக்கிறார்கள் மணிமுடியை — காங்கிரசுக்கு அல்ல— காங்கிரஸ் அல்லாதாருக்கு! காங்கிரசல்லாதார் மந்திரிசபை அமைத்தால், மாணிக்கவேலருக்கா அதிலே இடமிருக்காது! நிச்சயமாக உண்டு! எனினும் அவருக்கு ஆச்சாரியார் 'வேலை' தருவதாம், இது பெருமையாம்!! என்ன வேடிக்கை வேதனை ததும்பும் வேடிக்கை!! வேங்கைக் காடு—நரி ஆட்சி — நரிக்கு நகாரா கொட்டும் வேலைக்கு, புலி, மனு போடுவது!!

மாணிக்கவேலருக்கு மந்திரி வேலை தருகிற உரிமையோ, யோக்யதையோ, ஆச்சாரியார் பெறவில்லை—காரணம் ஆச்சாரியாரின் காங்கிரசுக்கு மக்கள் பெருவாரியான ஓட் அளிக்கவில்லை.

காங்கிரசுக்கு நாடாளும் உரிமை இல்லை—மக்கள் தீர்ப்பு அது.

'உருகி உடல் கருகி' உள்ளே நுழைந்த காங்கிரஸ் கட்சியிலே ஆச்சாரியார் இல்லை — அவர் அப்போது 'பஜகோவிந்தம்' செய்து கொண்டிருந்தார்.

மாணிக்கவேலரும் அவர் போலவே வெற்றி பெற்ற காங்கிரசல்லாதாரும் ஐக்ய ஜனநாயக முன்னணி அமைத்தனர்—நேர்மையான அரசியல் முறையின்படி காரியம் நடைபெறுவதானால், முன்னணிதான் மந்திரிசபையை அமைத்திருக்க வேண்டும். அமைத்திருந்தால், மாணிக்கவேலர், 'கனம்' ஆகியிருப்பார். ஆச்சாரியாரோ, 'அரோரம்' எழுதிக்கொண்டிருக்கக் கூடும்! அத்தகைய ஆச்சாரியார், உள்ளே — நுழைகிறார், கொல்லைப் புறக் கதவைக் கவர்னர் திறந்ததால். நுழைந்தவர் காங்கிரசுக்கு மெஜாரடி இல்லாததைக் காண்கிறார், மந்திரி வேலைக்கு வருமாறு மாணிக்கவேலரை அழைக்கிறார்! தண்டச்சோற்றுராமன், தயிர்வடை பாயாசத்துடன் விருந்து வைக்கிறான், சமாராதனைக் கூட்டம் நடத்தும் சம்பூர்ண சாஸ்திரிகளுக்கு—என்று

எப்படி இருக்கும் வேடிக்கை!!

அதைவிட வேடிக்கை அல்ல
இது, மெஜாரடியற்ற காங்கிர
தேர்தலுக்கு நிற்காத ஆச்சாரியா
டைய தலைமையிலே, மந்திரிச
அமைக்கிறேன், உமக்கு ஒரு இட
உண்டு, வருகிறீரா, என்று மாணிக்
வேலரை அழைப்பது! இதைவி
வெற்றி பெற்றவருக்கு அவமான
வேறு என்ன செய்ய முடியு
அந்த அவமானச் சின்னத்தை
அன்பர் மாணிக்கவேலர், அமை
சர் பதவி என்று எண்ணுவ
அவருக்கு 'இடம்' மக்கள் தீர்ப்பி
படி கிடைத்துத்தீரும் — ஆச்சா
யார், யார், அவரிடம் கை கட்டி
'சேவகம்' செய்வதா மாணிக்
வேலருக்கு ஏற்ற நிலைமை! இந்
நிலையை பெறவா, காங்கிரசை ம
கவ்வச் செய்தார்! அவர், எண்ணு
கிறாரோ இல்லையோ, நாம் எண்ணு
கிறோம், வேதனை குபுகுபுவெ
கிளப்பத்தான் செய்கிறது. அ
வேதனை கொண்டவர்கள்தா
வாலாஜாவில் அவருக்குக் கருப்
கொடி காட்டினவர்கள், என்ப
நான் அறிவேன், நாடு அறியு
அவர் அறிய மாட்டார், ஆச்சா
யார், அனுமதிக்க மாட்டார்!

(9-ம் பக்கம் பார்க்க)

## ஆரம்பமாயிற்று!

திருவாங்கூரைச் சேர்ந்த கோ
டயத்தில், காங்கிரஸ் ஆட்சியி
தொழிலாளர்மீது ஏப் 23-ந் தே
துப்பாக்கிப் பிரயோகம் செய்த
கள். மூன்று தொழிலாளர் மரண
பலருக்குப்படுகாயம். அகிம்ச
ஆட்சியின் கொடுமைக்குப்பலியா
தொழிலாளர்கள், வெள்ளையருக்கு
சொந்தமான தோட்டமொன்றி
வேலை செய்தவர்களாம். வெள்
நிற ஏகாதிபத்யத்தைக் காக்க, ம
சள்நிற ஆதிபத்யம்சுட்டுப்பொசுக்
யிருக்கிறது. பொதுத் தேர்த
லுப்பின், மீண்டும், துப்பாக்கிமு
கம், கேட்கத் துவங்குகிறது. கா
கிரஸ் ஆட்சியில் இதைத்த
வேறெதுதான் எழும்பும்! இர
குடித்த புலிகளாயிற்றே!!


## சேலம் மாவட்ட தி. மு. க.

4—5—52 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு சேலம் மாவட்ட தி. மு. க. கூட்டம் நடைபெறும்.

இடம்:— செவ்வாய்ப்பேட்டை லீபஜார் E. R. கிருஷ்ணன் மண்டி.

பலமுக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்படும். வருகை தந்து ஆலோசனை தரவேண்டுகிறோம்.

ப. கண்ணன். ஜி. பி. சோமசுந்தரம்.
வி. உறுப்பினர். செயலாளர்

# வாலாஜாவில் மாணிக்கவேலர்

# எங்கும் கருப்புக்கொடிகள்!

## ஆச்சாரியார் தூது அம்பலம்

## கழகத் தோழர்கள் எழுவர் கைது

## தடியடி, சிறை, வழக்கு

27—4—52 ஞாயிறு அன்று மாலை, மந்திரியான மாணிக்கவேலர் வடாற்காடு மாவட்டத்தைச்சேர்ந்த வாலாஜாபேட்டைக்கு வந்தார்.

அங்கு அவர் முனிசிபல் வாசகசாலையைத் திறந்துவைக்கவே அழைக்கப்பட்டிருந்தார், நகரசபையாரால். அந்த அழைப்பை ஏற்று அவர் வருகிறார் என்றவுடன், தி. மு. கழகத்தினர் கூடினர்; சிந்தித்தனர்.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு, மந்திரியாகிவிட்டார் மாணிக்கவேலர் — இது மக்களுக்குச் செய்யும் பாபெருந் துரோகம் என்பதைக் காட்டவேண்டும் என்று தீர்மானித்தனர். பொதுச் செயலாளரின் அனுமதியும், ஆலோசனையும் கோரினர்.

26—4—52 சனிக்கிழமை மாலை 3-மணிக்கு, தோழர் தில்லை—வில்லாளன் முன்னிலையில் கூடிய வாலாஜாபேட்டை தி. மு. கழக செயற்குழுவின் அவசரக் கூட்டத்தில், மாணிக்க்வேலருக்குக் கருப்புக்கொடி காட்டத் தீர்மானிக்கப்பட்டது. கருப்புக்கொடி நிகழ்ச்சிக்குப் பிறகு பொதுக்கூட்டம் நடத்தவும் முடிவுசெய்யப்பட்டது.

செயற்குழு முடிந்தது. சுழற்காற்றெனத் தோழர்கள் சுற்றிச் சுற்றிப் பணியாற்றினர். வாலாஜாவிலுள்ள கழகக் காளையர் அனைவரும் ஆளுக்கொரு பணியேற்று ஓயாதுழைத்தனர். ஒருவர் கருப்புத் துணிகளை எடுத்துவந்தார். இன்னொருவர், பழைய துணிகளைக் கொணர்ந்து, கருப்புச்சாயம் துவைத்து உலர்த்தினர். மற்றொருவர், கருப்புக்கொடிகள் தைத்தபடியிருந்தார். ஒரு தோழர் தட்டிகளில் எழுதிக்கொண்டிருந்தார். இப்படி, தோழர்கள் தமக்குள் அலுவல்களைப் பங்கிட்டுக் கொண்டு தாம் தாம் ஏற்ற பணிகளைச் செவ்வனே முடிக்க அரும்பாடுபட்டதை நாம் மறக்க முடியாது.

சின்னஞ்சிறு வண்ணக் குடிசைதான், வாலாஜாவின் கழகப் பணிமனை. அந்தக்குடிசை, அன்று வீரர் கோட்டமாக மாறிவிட்டது.

போர் வீரர்கள், பாசறைக்கு வந்து படைக்கலங்கள் பெற்றுச் செல்வது போல அப்பப்பொழுது, தோழர்கள் வந்து வந்து, யோசனைகள் கேட்டவண்ணமிருந்தனர்.

இந்தச் செய்தி மாலை ஐந்து மணிக்குள்ளாக, வாலாஜாவுக்கு மிக அண்மையிலுள்ள ராணிப்பேட்டை ஆற்காடு போன்ற இடங்களிருந்தெல்லாம் தோழர்களுக்கு எட்டி, அவர்கள் மறுநாள் நடக்கவிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றி விவரமறிய நேரில்வரத் தொடங்கிவிட்டனர்.

இரவும் வந்தது. அப்பொழுது தான் சுவரொட்டிகள் தயாராகி வந்தன. உடனே தோழர்கள் ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துச் சென்று, எங்கும் நிறைந்திருக்கும் விதமாக ஒட்டிவிட்டனர். விடிந்ததும், வாலாஜா வாழ்வோர் இந்த சுவரொட்டிகளின் முகத்திலேதான் விழித்தனர்.

சிலருக்கு ஆச்சர்யம். வேறு சிலருக்குக்கோபம், பலருக்கு மகிழ்ச்சி, இந்தக் கருப்புக்கொடி நிகழ்ச்சியை அறிந்தவுடன். ஆனால் எதற்கும் தயாராகவுள்ள ஃழக இளைஞர்கள், மாலையில மங்கிரியாருக்குக் கருப்புக்கொடி வரவேற்புக்கான முயற்சிகளில் முழு மூச்சாக வேலை செய்து கொண்டிருந்தனர்.

நகராண்மைக் கழகத்திலேமந்திரியாருக்குக் கட்டியிருக்கும், மாலை சரியாக இருக்கிறதா என்று பரிசீலனை செய்தனர். அதேநேரத்தில் கருப்புக்கொடிகள் எத்தனை, ஒட்டிய விளம்பரங்களில் எத்தனைகிழிக்கப்பட்டுவிட்டன, மேலும் அங்கெல்லாம் விளம்பரங்கள் ஒட்டப்பட்டனவா என்ற விசாரணை, அந்தச்சிறுகுடிசையில். அதே சமயத்தில், போலீஸ் நிலையத்தில், 'ரிசாவ்' படையின் லாரி வந்து நின்றது. 'எங்கே அந்த கழகச் செயலாளர் அழைத்துவா' என்று போலீஸ் அதிகாரி கட்டளையிட, சிப்பாய்கள் சிதறியோடினர். தோழர்களைக் காணாது அலுத்துத் திரும்பினர்.

மாலை நேரத்தில் மந்திரி வருகிறார். காலையிலே தண்டோரா போட்டார்கள். 'மந்திரி வருகிறார், மல்லிகைப் பூமாலை கொண்டுவாருங்கள்' என்று அறிவித்தனர்—இல்லை. 'கூட்டம் கூடாதீர்கள், அப்படிமீறினால், சட்டப்படி குற்றம் புரிந்தவர்களாவார்கள்; தண்டிக்கப்படுவார்கள்' என்றுதான் அறிவித்தார்கள். ஊராரில் விவரமறியாதவர்கள்விழித்தனர்; குறிப்புணர்ந்தோர் குறுநகை புரிந்து ஆட்சிபுரிவோரின் கோணல் புத்தியைக் கேலிபேசினர். மந்திரி வருகிறார், மக்கள் வெளியில் உலவக் கூடாது என்று தடை போடுகின்றனர், என்ன வெட்கக்கேடு என்று சொல்லாத வாயில்லை — அங்கு, அன்று. மக்களுக்கு மந்திரியே தவிர, மந்திரிக்காக மக்களில்லை — மக்கள் கண்களிலிருந்து மந்திரியை

7-ம் பக்கம் பார்க்க

திராவிடநாடு

காஞ்சி] 4—5—52 [ஞாயிறு

# சிகப்பு நாள்

★

போர்! போர்! அவன் வாழ்க்கையே ஒரு பெரும்போர்! காலை முதல் மாலைவரை அவன் நடமாடும் இடமெல்லாம் போர்க்களந்தான். வீடோ—வீடல்ல அது; பாசறை! மறுநாளைய வாழ்க்கைப் போராட்டத்திற்கு வழிவகுக்கும் யுத்த முகாம்.

நாளெல்லாம் துடிக்கிறான். ஒரு நாளல்ல; சில ஆண்டுகள் அல்ல; பிறந்தது முதல்; பாட்டன்காலத்திலிருந்தே! பரம்பரை பரம்பரையாகவே.

வறுமைத்தேள் கொட்ட, துன்பக்கழுகு கொத்த, வாடுகிறான்—வதைகிறான் — ஆனாலும் வாழுகிறான்.

ஆலையிட்ட கரும்பாகிறான். அலைகடல் துரும்பாகிறான். 'அய்யோ' என்கிறான். "அப்பாடா" என்கிறான். ஆண்டவனையும் அழைக்கிறான்.

தொண்டை வரள்கிறது; தொல்லையும் வளர்கிறது.

செக்கிழுக்கிறான். செருமியழுகிறான். மூட்டை சுமக்கிறான். முதுகை ஒடித்துக்கொள்கிறான். மாடாக மாறுகிறான், ஓடாகத் தேய்கிறான்.

பிச்சைக்காரன், எச்சில் திருடி, இப்படியெல்லாம் பெயர் எடுக்கிறான்.

கூலி! காலி! இப்படியும் அழைக்கப்படுகிறான்.

யார் இவன்? மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ முடியாத இந்தப் 'பாபி' யார்?

...வன்தான் பாட்டாளி. உழைக்... தவன். அவனுக்கு விமோ... கிடையாதா? வியர்வைக்... ல மிதக்கவேண்டியவன்தானா? வாழப் பிறந்தவர்களின் பாதங்களில் வீழ்ந்துகிடக்கவேண்டியவன்தானா?

ஆறுதல் சொல்வார் யாருமில்லையா?

தேறுதல் கூறுவோர் கிடையவே கிடையாதா?

உண்டு! அமோகமாக உண்டு!

"பாட்டாளியே! பதறாதே! பகவான் இஷ்டத்திற்கு விரோதமாகப் பேசாதே! முன்ஜென்ம வினைகளுக்கு இந்த ஜென்மத்தில் அனுபவிக்கத்தானேவேண்டும். நீ உழைப்பவனாயிற்றே; உனக்கே தெரியுமே—தினை விதைத்தவன் தினை அறுக்கத்தானேவேண்டும். நீ பண்ணிய பாபங்களுக்கு — இப்போதல்ல— கடந்த ஜென்மத்தில் — நீ தானே பதில் சொல்லவேண்டும்"

இந்த விதத்திலே அவனுக்கு ஆறுதல் வழங்கப்படுகிறது. பாசத்தோடு! பரிவோடு! 'பஜகோவிந்தம்' பாஷையிலே!

கேட்கிறான் அந்த உபதேசத்தை உபத்திரவத்தால் சீராட்டப்படும் அந்த ஏழை. எவ்வளவு நாளைக்கு கேட்டுக்கொண்டிருக்கமுடியும்.

மான் சாகத்தான் வேண்டுமென்று புலி கூறுகிறது. கிளி வாழ்வது கூடாதென்று பூனை சொல்லுகிறது. மனிதன் வாழக்கூடாதென—அவனைப் போன்ற 'மனித உருவம்' சொல்கிறது. இந்த விசித்திரமான ஆனால் வேதனை நிரம்பிய உலகச்சக்கரம் உருண்டுகொண்டேயிருக்கிறது. வாழ்வோடு மனிதன் போராடுகிறான் — அவனது மனைவி போராடுகிறாள்—குழந்தைகள் போராடுகின்றன—'பரம்பரை'யே போராடவேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டத்தை அலட்சியக் கண்களோடு பார்ப்பவர் பலர், வாழ்வை போகக்களமாக்கிக் கொண்ட வர்க்கத்தினர். அதிர்ச்சிக் கண்ணோடு பார்ப்பவர் பலர், வேதனைபடுபவரின் விழிப்பு, விபரீதமாகிவிடுமோ என்று எண்ணுபவர்கள்.

இரு தரத்தினருமே இன்றுபுறங்காட்டிடவேண்டிய சூழ்நிலை உதயமாகியிருக்கிறது.

வேதனையால் விம்முகிறவனிடம் வேதாந்தமும், விழித்துக்கொண்டவனிடம் விரட்டல் பார்வையும் இனி பயன்படாது என்ற அளவுக்குப் பாட்டாளி உலகம் தோள் தட்டி நிற்கிறது.

தீயிற் புழுவென மாண்டிடு... கோரம், எதிர்த்தாலும் வரப்போகிறது, எதிர்க்காது, இளித்தவாயராய் உலவினாலும் வரத்தான் போகிறது.

எதிர்க்காது விட்டால் தலைமுறை தலைமுறைக்கும் கொடுமை நிலைத்திருக்கும், பாட்டாளிக் குடும்பத்திலே.

எதிர்த்து எலும்புச் சக்கையாகிவிட்டாலும் கவலையில்லை, எதிர்காலத்திலாவது ஏழைக் குடிசையில் இன்பநிலவு கிளம்பும்.

இந்த உறுதியோடுதான் உறுமிடத் துவங்கிவிட்டது, ஏழையர் உலகு!

ஏழையெனில் எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்ற இரும்பு மனத்தினரின் இடுப்பொடிக்கப்படுகிறது பல இடங்களில்!

பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் ஆக்கப்பட்டவர் — தாழ்ந்து தாழ்ந்து போனவர் — தலையை நிமிர்க்காதவர்—"மனிதரில் நாமும் மனிதர்! மண்ணன்று இமை திறப்போம்" என்று எக்காளமிடத் துவங்கிவிட்டனர்.

அந்த எதிரொலிதான் இன்று பாரெங்கும் கேட்கிறது. பலமான குரலில்!

இருண்ட வீட்டிலே ஒளிபுகுந்துவிட்டது! மருண்ட மனத்திலே மகிழ்ச்சி நுழைந்துவிட்டது!

எவ்வளவு கஷ்டம் அனுபவித்தோம் என்ற பெருமூச்சும், எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கையான புன்னகையும் தோன்றுகிறது தேய்ந்த வாழ்க்கையினருக்கு!

இதுவரை பட்ட இன்னலையும் இனி ஏற்பட இருக்கும் இன்பத்தையும் கணக்குப் போடுகிறவர்கள் களிக்காமலிருக்கமுடியாது.

மின்னலெனத் தாக்கும் வலியால் பிரசவ வேதனைக்குள்ளாகியிருக்கும் பெண்மணி, பிறக்கப்போகும் கண்மணியை நினைத்து ஊமைப்புன்னகை கொள்ளத்தான் செய்வாள்.

வாழ்நாள் முழுதும் வாடிய சமுதாயம், வாழ்வுக்கான போரில் ஈடுபட்டு, அந்தப் போரிலே பெறப்போகிற வெற்றிக் குழந்தைக்கா...

தாங்கிக்கொள்கிற அடக்குமுறைகள், வெறியாட்டங்கள்தான் பிரசவநேரத்துப் பெருவலிகள்.

அதைச் சமாளிக்கும் தாயின் தன்மைதான், தாழ்த்தப்பட்ட வர்க்கத்தின் புரட்சிப் பொறியாகும்.

அந்த சமாளிப்பிலே ஏற்றுக்கொண்டிருக்கிற சங்கடங்கள் சாதாரணமானவைகளா? இல்லை!

சாவுமுனை! தூக்குமேடை!!

இன்று பசுமலையிலும், கோட்டயத்திலும் பரிமாறிய பச்சை ரத்தம் மட்டுமல்ல, அன்று சிகாகோநகரின் வீதியிலேயே சிகப்பு படிந்திருக்கிறது.

1886 மே முதல்நாள் உரிமைக்கிளர்ச்சி நடத்தியவர்களை நாயைப்போல் சுட்டுவீழ்த்தி நடுத்தெருவில் எறிந்துவிட்டார்கள்.

15 மணி நேரம் வேலை செய்ய முடியாது. ரத்தம் சுண்டுகிறது. சித்தம் சோர்கிறது, என்கிற இந்த துணிவான தொனி 1878ல் அமெரிக்காவில் புறப்பட்டது. அதனுடைய வளர்ச்சியிலே ஒரு அங்கந்தான் சிகாகோ சிகப்பு.

மே முதல்நாள் வீதியிலே ரத்தக்குளம் வெட்டினர் வெறியர்.

மே நாலாம்நாள் சிகாகோ சீறிக்கிளம்பியது. மாபெருங் கூட்டம். மக்கள் கடல். கயவர்கள் செயல் கண்டிக்கப்பட்டது. கண்ணீர்த்துளிகள், செந்நீர்த்துளிகளைப்பற்றி சிங்கக்குரல் எழுப்பின. சிகாகோ சவங்கள் பேச ஆரம்பித்தன. சீர்கெட்ட வாழ்வினர் அந்தப் பிணங்களை சீராட்டிப் பாராட்டினர்.

1889ல் பாரிஸ்நகரில் சர்வதேசத் தொழிலாளரின் மாநாடு கூடியது. சிகாகோவின் சிகப்புமண் அங்கு ஆவேசகீதம் பாடியது.

'படமுடியாதினித் துயரம், பட்டதெல்லாம் போதும்' என்று பஜனை பாடி முடித்துவிடவில்லை மாநாட்டை! தொழிலாளர்மீது அக்கரை பிறந்துவிட்டது பாரீர் என்று தோள்தட்டி வீரப்பிரதாபம் பேசியதோடு நின்றுவிடவில்லை மாநாடு!

உலகமுழுதும் உணர்ச்சி வெள்ளம் கரைபுரளவேண்டும் என்று முழங்கியது, மே முதல் நாள் சிகாகோ!

சிகப்புநாள்! அந்த நாளை, நலிந்தவர் பெருநாளாக ஆக்கவேண்டுமென்று தீர்மானம் தீட்டினர்.

ஏழையர் உலகு, ரஷ்யாவிலே மட்டுமல்ல, எத்தர் வாழமுடியாத சீனாவிலேமட்டுமல்ல, ஆதிக்கவெறியின் அட்டகாசம் தாங்கமுடியாத அமெரிக்காவிலும் அதன் எடுபிடி நாடுகளிலுங்கூட, ஏழைகளின் இதயக்குமுறல், மே முதல்நாள் முரசம் ஒலித்திடுகிறது, ஆண்டுதோறும்.

ஆண்டுக்கு ஆண்டு ஆனந்தம் வளர்கிறது.

புதுவாழ்வுக்கான அருணோதயம் தெரிகிறது.

விடுதலை விடிவெள்ளி முளைக்கிறது.

இங்கே, திராவிடத்தில், உழைப்போர் பூமியில், தேன்சுரக்கப்பேசி தேய்ந்து போனவர் வாழ்வைத் தின்றிடும் தீயவர்களை வீழ்த்திடும் அறப் போராட்டத்திலே மேதினமும் ஒரு நல்ல கேடயமாக விளங்குகிறது.

அந்தக் கேடயத்தை திராவிட முன்னேற்றக் கழகம் — திராவிடர்களுக்காக, ஆம் தொழிலாளர் வாழ்வுக்காக கையிலேந்திக் களத்திலே நிற்கிறது.

இங்கு சிகாகோக்கள் ஏராளம். எங்குமே — மே முதல் நாள் என்றல்ல எப்போதுமே.

அந்த 'சிகாகோ' சிகப்பு, சீனாவை ரஷ்யாவை சிகப்பாக்கிற்று!

இங்கே, இந்த 'சிகாகோக்களின்' சிகப்பு, திராவிடத்தை செழிப்பாக்கும்!

இது உறுதி! இந்த உறுதியை— சபதத்தை — இந்த நல்ல நாளில் நாம் ஏற்றுக்கொள்வோம்.

❀

---

**காஞ்சியில்**

**4—5—52ல்**

கருணாநிதி படிப்பகத் திறப்புவிழா

நாஞ்சில் தோழர் கி. மனோகரன்

திறந்துவைப்பார்.

தி. மு. க. கிளை.

---

5-ம் பக்கத் தொடர்ச்சி

மறைந்துவிடுவதால் யாருக்குலாபம் என்ற, சிந்திக்காத மனம் படைத்தோர், அங்கு கிடையாது.

தடை விதித்துள்ளனர் சர்க்கார்; இந்தச்செய்தி தோழர்களின் செவிகளில் விழுந்தது. அப்பொழுதான் அவர்களின் நடையில் மிடுக்கு தென்படத்தொடங்கிற்று. எஃகு மனங்கொண்டவர்கள்யிற்றே அவர்கள், ஏறுநடைதானே காணமுடியும், அவர்களிடம்—கழகத் தோழர்களின் பண்பறிந்தவர்கள் பாராட்டாமல் போகவில்லை.

மந்திரி வருகிறார் என்றவுடன், மக்களை மருட்டும் தடையுத்தரவு வந்தது! பிறகு மக்களை விரட்டியடிக்கப் பட்டாளமும் வந்து சேர்ந்துவிட்டது!

தடையும், படையும், இலட்சியத்திற்காக எந்த நஷ்டத்தையும், கஷ்டத்தையும் ஏற்கத்துணிந்த இளங்காளையர்களை என்ன செய்துவிட முடியும்? ஆகவேதான் அவர்கள் வாலாஜா 'ட்ரங்ரோடு' இருமருங்கிலும், ஒரு மைல் நீளத்திற்கு கொடிகளேந்தி, அணிவகுத்துள்ள படைபோல நின்றனர். ஒவ்வொருவரும் ஒரு கொடிதாங்கி, மந்திரி வரட்டும், அவர் மக்களுக்குச் செய்துள்ள துரோகத்தை எடுத்துக் காட்டுவோம் என்று காத்திருந்தனர்.

போலீஸ் படையினர் மூன்று கெஜத்திற்கு ஒருவராக 'சக்கர வியூகம்' வகுத்தும், கருப்புக் கொடியை மறைக்க முடியவில்லை.

மாலை ஐந்தரைமணிக்கு மந்திரியார் வந்தார்.

எங்கும் திரும்பிப்போ, திரும்பிப்போ என்ற குரல்—அதன் எதிரொலி! மாணிக்கவேலரே, மக்கள் துரோகியே, திரும்பிப்போ என்ற முழக்கம், மந்திரியின் செவிகளில் புகுந்து, சிந்தையைக் குடைந்தது— அதனால்தான் முகம் சுருங்கிற்று. பிறகு கருத்தது — பிறகோ சிவந்தது! மந்திரியைத் திரும்பிப்போ என்பதோடு விடவில்லை, மக்கள் குரல், மந்திரிப்பதவியை ராஜிநாமா செய், ஆச்சாரியார் சூழ்ச்சி ஒழிக என்றும் கோஷித்தனர். மந்திரி மாணிக்கவேலர் கருப்புக்கொடி

களை கடல்போலப் பரவியிருப்பதைக் கண்டு கலங்கினார் — அந்தக் கருங்கடலில் மிதந்துதான் சென்றார்!

அவர், பேசும் மேடைக்குச்செல்லும் பொழுதும், தோழர்கள் கருப்புக் கொடிகளை, அவர் கரத்திலே தந்திடச் சென்றனர்.

அங்கேயும், அவரின் துரோகப் பாதைத் தெளிவாகத் தெரியும்படி, ஒலிகளை ஒலித்தனர்.

பட்டாளம் அவருக்குப்பாதுகாப்பளித்தாலும், அவர்கள் ஒலித்த ஒலிகள் அவரைச் சித்திரவதை செய்தன.

கோபத்தில் பல வார்த்தைகளைக் கொட்டியளந்தார் மந்திரியார். ஆனால் அவர் பேச்சைக் கேட்கவிடவில்லை மக்கள். திரும்பிப்போ என்றே முழங்கியவண்ணமிருந்தனர்.

கூட்டம் முடிந்ததும், அவர் சென்னை செல்கிறார் என்றவுடன் அந்தப் பாதையிலும் கருப்புக் கொடிகளுடன் காத்திருந்தனர். காரைக் கண்டதும், கருப்புக்கொடி காட்டி, தங்கள் வெறுப்பைத் தெரிவித்தனர்.

போலீஸார், தங்கள் 'கைவரிசை'யைக் காட்டத் தவறவில்லை. மாலையிலேயே கே. டி. எஸ். மணி, டி. சபாபதி ஆகிய தோழர்களைக் கைது செய்தனர். பிறகு சின்னப்பன், கச்சபாலையம் என்ற இரண்டு தோழர்களை மிகவும் துன்புறுத்திக் காவலில் வைத்தனர். சில இடங்களில் தடியடியும் தந்து, தம் கடமையைச் செய்ததாகக் காட்டிக்கொண்டனர்.

இரவு எட்டு மணிக்கு, தடையுத்தரவு இருந்தும், அதனை மீறி, தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடந்தது. தோழர் அன்பெழிலன், இரணியதாசன், நாகரத்தினம் ஆகிய மூவரையும் கைது செய்தனர்.

கருப்புக்கொடி நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்திட கழகத் தோழர்கள் அனைவரும் பெரும்பாடுபட்டனர். ஆற்காடு பொன்னம்பலம், அவரது தோழர்கள், ராணிப்பேட்டை நண்பர்கள், காஞ்சிபுரம் எத்திராஜ், சம்பந்தம் மற்றும் அவரது தோழர்கள், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை, வாலாஜா வரதராசன், முனுசாமி, திராவிடர்கழகத்தோழர் இளங்குப்பன், எல்லோரும் கருப்புக்கொடி வரவேற்பை மிகச் சிறப்பாக நடத்தினர். தலைமை நிலையத்திலிருந்து தில்லை—வில்லாளன் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருந்தார்.

மந்திரி மாணிக்கவேலர், மக்கள் மன்றத்தில் நிறுத்தப்பட்டு, தீர்ப்பளிக்கும் நிகழ்ச்சிதான், வாலாஜாவில் அன்று நடந்த கருப்புக்கொடி நிகழ்ச்சி—மக்கள் தீர்ப்பை மந்திரியாருக்கு உணர்த்திய எல்லோரையும் பாராட்டுகிறோம், 'மனமார— வாழ்த்துகிறோம். ✲

---


**பெங்களூர் அக்கிப்பேட்டை**

சிக்கலால் பார்க்கில்

11—5—52 ஞாயிறு மாலை 5-மணிக்கு

தி. மு. க. பொதுக்கூட்டம்

நடைபெறும்.

அருப்புக்கோட்டை

M. S. ராமசாமி, பேசுவார்.



**அரங்கண்ணல்**

தீட்டிய

★ **புழுதிமேடு** ★

(விலை ரூ. 1—0—0)

சிறுகதைத் தொகுப்பு

கருணாநிதி பதிப்பகம், சென்னை 2.


## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளைகவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள் இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மானேஜர்.

12-ம் பக்கத் தொடர்ச்சி

பகுதிகளிலிருந்தும் வந்திருந்த அந்த விடுதலைச் செல்வங்களைக் காண மகிழாமலிருக்கவா முடியும்? பள்ளியில் பயின்ற நேரம் போக எஞ்சிய நேரமெல்லாம் கழகப்பணியில் ஈடுபடும் காளையர் கூட்டமன்றோ, அது! பாருங்கள் அந்த வீரர் பெரும் படையின், பட்டியலை:— லால்குடி: சிங்காரயர், திருவாம்பூர்: கூ. மு. பெரியசாமி, பீமநகர்: இரா. இளவழகன், அரியலூர்: வீராகவன், துறையூர்: து. மு. துரைராசு, து. வெ. சென்னிகிருஷ்ணன், குளித்தலை: கு பெரியசாமி, துறையூர்: சி. சப்பாணி, பீமநகர்: க. இலக்குவன், அலங்கநாதபுரம்: வா. தமிழ்மணி, சென்னை: வி. இளஞ்சேரலாதன், சிந்தாமணி: டி. ஆர். ரெங்கராஜன், லால்குடி: பெ. இராமன், முசிறி: து. சீதாராமன், மயில்வாகனன், கோட்டாத்தூர்: அ. அருணாசலம், வெங்கடாசலபுரம்: ப. இராவணன், உறையூர்: தி. சி. பாலசுப்ரமண்யம், மலைக்கோட்டை: சா. தி. அரசு, கோமாகுடி: கே. து. நமசிவாயம், லெ மருதையா, பொன்மலை: அ. தயரதாாசன், மலைக்கோட்டை: தி. மு. குருநாதன், வையம்பட்டி: சுப்பராமன், அய்யாவு. திருச்சி: ஜி. ராமச்சந்திரன், முத்துசிதம்பரம், தி. இலக்குவன், டி. மாணிக்கம். கூழிபிறை: நா. இராமச்சந்திரன், முசிறி: ஒ. ஆற்றழகன், கொம்பம்பட்டி: ஆர். சுந்தரேசன், அம்பில்: எ. கே. பெருமாள், குளித்தலை: கே. ஆர். அண்ணாவி, அம்பில்: எம். கலியபெருமாள், டி. பிச்சையா, ஆர். திருஞானசம்பந்தம், ஆர். கோபாலகிருஷ்ணன். டி. சாமிஅய்யா, டி. கோவிந்தராசன், தி. பெரியசாமி, எம். இரத்தினம், என். நடராசன். சேலம்: எ. கே ஆறுமுகம், அரியலூர்: கோ. சிவபெருமாள், பாளையங்கரை: எம். கே. வீரமணி, கடியாப்பட்டி: ராமச்சந்திரன்.

இவர்கள் அத்தனை பேரும் வகுப்பு முடிந்து 'போய்வருகிறோம்' என விடைபெற்றபோது, இவர்களைப் பிரியவேண்டியிருக்கிறதே என்கிற எண்ணம் நெஞ்சைத் துளைத்தது.

பயிற்சி பெற்ற மாணவ நண்பர்களை வாழ்த்துகிறோம் — அவர்கள் பணி வளரவேண்டுமென்று. ✲

# நேர்வழிக்கு அழைக்கும் கொடிதான், கருப்புக்கொடி

4-ம் பக்கத் தொடர்ச்சி

மெஜாரிடி பெறாத காங்கிரஸ், மந்திரிசபை அமைத்த அக்ரமத்தையும், 152 உருவாரங்கள் நுழைந்தும் மூளை பலத்துக்காக ஆச்சாரியாரை அழைத்துவந்த ஆபாசத்தையும், இவ்வளவும், எப்படியாவது பதவியில் காங்கிரஸ் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும் என்றசுயநலத்தின் விளைவு என்பதையும் நாடெங்கும் எடுத்துரைத்து, மக்களை வீரர்களாக்கி, விடுதலை விரும்பிகளாக்கி. நாட்டை நயவஞ்சகர்களிடமிருந்து மீட்டு, நல்லாட்சி அமைக்கும் காரியத்தில் நண்பர் மாணிக்கவேலர் ஈடுபடுவார்—அதற்கு ஏற்ற அறிவாற்றலும், பொதுஜன செல்வாக்கும் உள்ளவர், என்று நாம் எதிர்பார்த்திருந்தோம்—அவரோ,

என்னைப்பார்
என் இடத்தைப்பார்
உன் கண்ணாலே!
ஆச்சாரியார் பின்னாலே!

—என்று பாடுகிறார்! இதுவா, 'மாணிக்கவேலர்!' பிற்பட்ட வகுப்புக்குத் துரோகமிழைத்த காங்கிரஸ் ஆட்சியைத் தொலைத்தாகவேண்டும் என்று வீர முழக்கமிட்ட மாணிக்கவேலர் எங்கே, மகா மேதாவியும் தவசியுமான ஆச்சாரியாருடைய தலைமையிலே பணிபுரியும் பாக்கியம் கிடைக்கப் பெற்றேன், என்போல் பாக்யவான் வேறு உண்டோ என்று திருவாய் மொழிபாடும் மாணிக்கவேலர் எங்கே! வீரரைக் கண்ட கண்களால், வீழ்ந்தவரைக்காணக் கூசமல்லவா! கருப்புக்கொடியின் பொருள் அதுதான்!

கருப்புக்கொடி ஆச்சாரியின் சூழ்ச்சிக்கு மாணிக்கவேலர் பலியானதை உணர்ந்த கொள்கை வீரர்கள், மாணிக்கவேலரின் போக்கைக் கண்டிப்பதன் மூலம், ஆச்சாரியார் மந்திரிசபைக்கு மக்களின் முழுமூச்சான எதிர்ப்பு கிளம்பிவிட்டது துவக்கத்திலேயே, என்பதை எடுத்துக்காட்டும் கொடி. மாணிக்கவேலர், இப்போது செல்லும் பாதை சரியானதல்ல, அவருக்கும் சரி, வீரமரபுக்கும்சரி, அந்தப்பாதை, பெருமை தருவதல்ல; வேறுபாதை, ஜனநாயகப் பாதை தெளிவாக இருக்கிறது, அதிலே மாணிக்கவேலர் வந்துவிடவேண்டும், அந்தப் பாதையிலே, அவருக்கு ஆதரவுகாட்ட, ஒத்துழைக்க, ஆயிரமாயிரம் இலட்சிய வீரர்களும், இலட்ச இலட்சமாகப் பொதுமக்களும் உள்ளனர், எனவே நேர்வழி வருக, நேர்வழி வருக!—என்று மாணிக்கவேலரைக் கூப்பிடும், கொடி தான், கருப்புக்கொடி.

தகுதியோ, திறமையோ, அற்றவராக, மாணிக்கவேலர் இருந்திருந்தால், அவருக்கு, மந்திரி வேலை கிடைத்ததை, ஒரு வகையிலே பரவாயில்லை, 'பிரைஸ்' அடித்தது, என்று கூறியாவது, திருப்தி அடையலாம். மாணிக்கவேலர், குதிரைகளின் குளம்புச் சத்தத்திலே இலயித்துக்கிடாத, இராமநாதபுரம் ராஜா அல்ல—மக்கள் இயக்கத்திலே ஈடுபட்டவர்—உழைத்து உழைத்து உருக்குலைந்து போயிருக்கும் சமூகத்திலே தோன்றிய கருவூலம்! காலைமுதல் மாலைவரை பாடுபட்டுப் பாடுபட்டு, பிறரை வாழவைத்து, தான் இளைத்துப்போகும் உழைப்பாளிச் சமூகத்திலே தோன்றி, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாமல், கண்மூடி தர்பார் நடாத்தும் காங்கிரசைக் கண்டித்து, மக்களை காங்கிரஸ் வலையிலிருந்து விடுவித்திடப் பணிபுரிந்து வந்தவர்—அவர் இப்போது ஆச்சாரியார் வீசிய வலையில் வீழ்வதா! இதைக் கண்டிக்காமலிருக்க முடியுமா? பூனைக்குத் தாலாட்டுப் பாடக் கிளியை அமர்த்துவதா? எனவேதான், கருப்புக் கொடி!

நல்லவர்—நம்மவர்—மந்திரி வேலையைத் திறம்படப் பார்ப்பவர்—அவருக்கு வேலை கிடைத்திருக்கும் போது, கருப்புக்கொடி காட்டலாமா என்று சிலர் செப்பினராம்—உண்மை! அவர்களுக்கு முதலிலே அப்படித்தான் எண்ணப் பிறக்கும். நல்லவரும், நம்மவரும், திறமைசாலியுமான மாணிக்கவேலர், பொல்லாத ஆட்சிக்காரருடன் கூடிக் குலவலாமா? அவர்களிடம் 'வேலை' பெறலாமா? எடை போடுவதிலே எல்லப்பன், குண்டுமணி அளவுகூடத் தவறு செய்யமாட்டான்—ஆனால், அவன் வேலைபார்க்கும் கடையிலே, தேய்ந்துபோன படிக்கற்கள் உள்ளனவே—வீசைக் குண்டு, முப்பது பலம்தானே கொடுக்கும்! எல்லப்பன் அந்தக் கடையிலே உட்கார்ந்தால் யாருக்கு நல்லதாகும்? அதுபோலத்தான், இவர். அவருடன் கூடிக்கொள்வதும். எனவேதான், கருப்புக்கொடி! இதுவரையில் மந்திரி சபையிலே இடமே கிடைத்ததில்லை, இந்தச் சமூகத்துக்கு, இதுசமயம் எதிர்க்கலாமா, என்று சிலர் கேட்கின்றனர்—என்று அறிகிறேன். உண்மையிலேயே, உருக்கம் நிறைந்த கேள்வி இது. நானும், நமது தி.மு. கழகமும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு ஆட்சிப் பீடத்திலே உரிய இடம் தரப்படவேண்டும், என்ற கொள்கை கொண்டு, பணியாற்றுவதை அனைவரும் அறிவர். குறிப்பாக, தென் ஆற்காடு, வடாற்காடு மாவட்டங்களில், முன்னதில் உழைப்பாளர் கட்சிக்கும், இரண்டாவதில் பொதுநலக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட கழகமும் எந்த அளவுக்குப் பாடுபட்டன, என்பதை நாடு அறியும் — நல்லோர் மறக்கமுடியாது. எனவே, நெஞ்சில் நேர்மையுடன் கூறுகிறேன், ஒன்றல்ல, ஜனத்தொகை எண்ணிக்கையின்படி பார்த்தால் மூன்றுக்கு மேல் மந்திரிகள் கிடைக்கும் உரிமை நிச்சயமாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினிலே, வன்னிய சமூகத்துக்கு உண்டு. சட்டசபையிலும், முப்பதுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர் காங்கிரசல்லாத மந்திரி சபை அமைந்திருந்தால்—அமைக்கப்பட்டால், மாணிக்கவேலருக்கு மட்டுமல்ல, அந்தச் சமூகத்தினரில் மற்றும் இருவருக்குக்கூட, மந்திரி வேலை கிடைக்கும். அங்ஙனம் கிடைத்தாகவேண்டும் என்று, பார் கிளர்ச்சி செய்தாலும், மந்திரி என்ற

இலங்கையில் உரிமைப்போர் துவங்கியிருக்கிறது. பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 'மனித உரிமையை என்று மதிக்கும் இலங்கை அரசாங்கம்?' என அறிவுலகு கேட்கிறது.

# புண்படுத்தும் நோக்கமல்ல, எமது

ஆச்சாரியாரின் சிறையிலிருந்து விடுபட்டு மாணிக்கவேலர் கிளர்ச்சி செய்தாலும், அந்தக் கிளர்ச்சிக்குத் தக்க ஆதரவு திரட்டும் காரியத்தை நான் பெருமையுடன் செய்வேன். எனவே மாணிக்கவேலரை மந்திரியாக்கிவிட்டதன் மூலம், நியாயமாகக் கிடைக்கவேண்டியது குறைந்திருக்கிறது. மற்றும், மாணிக்கவேலர், பிற்படுத்தப்பட்ட வகுப்பாரின் முன்னேற்றத்துக்காக ஒரு திட்டம் தீட்டி, நாட்டுக்குக் காட்டி, ஆச்சாரியாருக்கு விளக்கி அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதிலே, தனக்கு முழு சுதந்திரமும் சகல வசதியும் தந்தாகவேண்டும் என்ற நிபந்தனை விதித்து, அதற்கு ஆச்சாரியார் சம்மதம் அளித்து, அப்படி ஒரு இலாகாவை ஏற்படுத்தி அதற்கு மாணிக்கவேலர் மந்திரியாக்கப்பட்டிருக்கிறாரா, என்றால், இல்லை! பிறகு, அவர் மந்திரியானதால் மார்புஉடையப் பாடுபடும் உழைப்பாளிச் சமூகத்துக்கு உடனடியாகவோ நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ கிடைக்கப் போகும் உரிமை, வசதி, சலுகை என்ன? மந்திரிசபை விளக்குமா!! கேட்டால், ஆச்சாரியார், வகுப்பு, ஜாதி, குலம், இனம் என்றெல்லாம் பேசுவது அநாகரீகம், என்று கூறுவார், அதற்கும் ஒரு பஜகோவிந்தம் பாடுவார், வேறு என்ன செய்வார். சமூக நலன்பற்றி, மந்திரி மாணிக்கவேலர் தொடர்ந்து நாலு கூட்டத்திலே பேசினாலே போதுமே, ஆச்சாரியார் ‘நிறுத்து’ என்று கூறிவிடுவாரே! இந்நிலையில், மாணிக்கவேலர் மந்திரியானதால் சமூக உயர்வு எப்படிக்கிடைத்துவிடும்— என்ன உறுதி தரப்பட்டிருக்கிறது! எனவே உழைப்பாளிச் சமூகத்தை ஆச்சாரியார் ஏமாற்றிவிட முடியாது என்பதை எடுத்துக்காட்டும் கொடிதான் கருப்புக்கொடி. காரணமின்றி, மனக்கஷ்டத்தையும் அடக்கிக்கொண்டு, நண்பராக இருந்தவரைப் பகைத்துக்கொள்ள எந்தப் பித்தனுக்குத்தான் மனம் வரும். மாணிக்கவேலரின் போக்கைக் கருப்புக்கொடி மூலம் கண்டிப்பவர்கள், உண்மையில், பொதுநலத்துக்கும் ஜனநாயகத்துக்கும், சமூக உயர்வுக்கும் பாடுபடும் நோக்கம் கொண்டவர்கள் எனவேதான், சபலம், ஏளனம், என்பவைகளைப் பொருட்படுத்தாமல், இளைஞர்கள் கருப்புக்கொடி காட்டினர். தடி தர்பார் செய்தது — இரத்தம் கசிந்தது! தடை மீறப்பட்டது! வழக்கு கொட்டும்! சிறைபுக நேரிடும்! இவ்வளவையும் தாங்கிக்கொள்ள முன்வந்த தோழர்களின் கொள்கைப் பற்றைப் பாராட்டுகிறேன். நமது நோக்கம் தூய்மையானது — எனவே நமது நெஞ்சுரம் வளரத்தான் செய்யும். நமது முறை, கண்ணியம் நிரம்பியதாக இருக்கவேண்டும். மாணிக்கவேலருக்கும் சரி, கருப்புக்கொடி காட்டப்படவேண்டிய நிலை எப்போது ஏற்பட்டாலும் சரி, நமது தோழர்கள், அரசியல் நாகரீகத்தின் வரம்பிலே நிற்கவேண்டும் — அப்போதுதான், வெற்றி கிடைக்கும். கரத்திலே கருப்புக்கொடியும், மண்டையிலிருந்து போலீஸ் தடியால் ஒழுகும் செந்நீரும், இப்படியும் ‘சூழ்நிலை’ சூது மதியினரால் ஏற்பட்டதே என்பதை எண்ணுவதால் கிளம்பும் கண்ணீரும், கொண்ட தோழர்கள், வெற்றி வீரர்களாவர்!

வாலாஜாவில், நடைபெற்ற கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தைக் கண்ட கனம் மாணிக்கவேலருக்குச் சினம் மிகுந்து, சிலபல கூறினார் என்று அறிகிறேன். கருப்புக்கொடி காட்டவேண்டி நேரிட்டதற்காக நாம் வருந்துகிறோம் — நம்மை வேதனையில் ஆழ்த்தியவர், கோபிக்கிறார்! என் செய்வது! பன்னெடுங் காலமாகவே, யாருக்காக, மனமாரப் பாடுபடுகிறோமோ, அவர்களை, எப்படியோ எதிர்முகாம் இழுத்துக் கொள்கிறது. அந்தத் தூபம் போடப்பட்டதும், நம்மைத் தாக்குவதிலே நம் உதவி பெற்றவர்கள் தனிச்சுவை காண்கிறார்கள். மந்திரி மாணிக்கவேலரும் அன்று வெகுண்டு பேசினார் என்று அறிகிறேன். அவருடைய கோபத்தை, நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்ளக்கூடிய, நெருங்கிய தொடர்பு எனக்கு இல்லை. உண்மையில நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் — நான் அவரைப் பார்த்தது இல்லை:— என்னையும் அவர் பார்த்ததில்லையாய்! வெற்றிக்குப் பிறகு, சென்னையில் நடைபெற்ற பாராட்டு விருந்திலே, அவரை நான் ஆவலோடு எதிர்பார்த்தேன், காணவில்லை! எப்படியும் விரைவிலே காண இயலும், என்று எண்ணிக் கொண்டிருக்கும் சமயமாகப் பார்த்து, ஆச்சாரியார் அவரை அழைத்துக்கொண்டார்:

அன்று வாலாஜாவில் அவர் கோபமாகப் பேசினார் என்றார்கள். கோபம் வரத்தான் செய்யும். எனக்கும் கூடத்தான் கோபம்— மாணிக்கவேலர் மீது அல்ல— ஆச்சாரியார்மீது!

எந்த வாலாஜாவில், வெற்றி வீரராக மாணிக்கவேலர் வந்திருந்து தி. மு. கழகத்தின் பாராட்டுரையைப் பெற்றிருக்க வேண்டுமோ, அங்கு அவருக்கு தி. மு. க. கருப்புக்கொடி பிடிக்கிறது என்றால் அவருக்குக் கோபமாகத்தான் இருக்கும். அவருடைய நெருங்கிய நண்பர்களுக்கு வருத்தமும் கோபமாகவும் இருக்கும். தி. மு. க, அவர்கள் மனதைப் புண்படுத்தும் எண்ணம் கொண்டதல்ல — என்ன இலாபம் அதனாலே! மாணிக்கவேலரும் கோபம் குறைந்த பிறகு, எண்ணிப் பார்க்கவேண்டும், கருப்புக் கொடி காட்டுகிறவர்கள் யார், என்ன நோக்கம் என்பது பற்றி: ஓட்டு வேட்டையின் மீது அவருடன் இருந்து கஷ்டம் அனுபவித்தவர்கள் தி. மு. கழகத்தினர் — மந்திரியாகி விட்டார். அவர், கூட இருந்தால், அறுவடையில ஏதோசிறிதளவாவது கிடைக்குமல்லவா தி. மு. கவுக்கு! அறுவடையிலே பங்கு வேண்டாம், எமக்கு அந்தப் பழைய மாணிக்கவேலர்தான் வேண்டும் என்றல்லவா கேட்கிறோம். கொள்கைப் பற்று தவிர, வேறென்ன காரணம் காட்ட

## டார்வின் தினம்

மனித சமுதாயத்தின் வளர்ச்சி குறித்து புது விளக்கம் தந்த பேறிஞர் டார்வின் அவர்களது 70 வது இறந்த தினம், ரஷ்யா முழுமையும் சென்ற ஏப் 20ந் தேதி கொண்டாடப்பட்டது.

# இலட்சிய வாழ்வே நம் குறிக்கோள்

முடியும், தி.மு.காவின் போக்குக்கு, மந்திரியின் நேசம், ருசிகரமானது—அவருடையபகை, ஆஸ்பத்திரிக்கோ சிறைச்சாலைக்கோ கொண்டுபோய்ச் சேர்க்கும் — தெரியும் — தெரிந்துதானே கருப்புக்கொடி காட்டினீர்கள் — காரணம்? — கொள்கை, வேறென்ன?

இந்த இலட்சிய உணர்ச்சி உங்களை உயர்த்தும், நிச்சயமாக, தி.மு.க.வுக்கு உரம் தரும், திராவிடத்துக்குப் பெருமை அளிக்கும்.

கோபம் கொண்ட மாணிக்கவேலர், கூறிய பலவற்றுள், ஒன்று, பதவி ஏற்றுக் கொண்டதற்காக இவர்கள் ஏன் கருப்புக் கொடி காட்டவேண்டும், நான் என்ன இவர்களிடம் ஒப்பந்தத்தில் கை எழுத்தா போட்டேன், என்பதாகும் என்று தெரியவருகிறது.

தேர்தலின்போது, தி.மு.க. வின் துணையை நாடியவர்களை, தி. மு. க. வின் கொள்கையிலே உயரியதும், உயிர்போன்றதுமான திராவிட நாடு பிரிவினைத் திட்டத்துக்காகச் சட்டசபையிலே ஆதரவளிக்கச் சம்மதம் தரவேண்டும் என்ற ஒப்பந்தம் கேட்கப்பட்டது—கோரப்பட்டது. இதற்காக, ஸ்டாம்பு ஒட்டிக் கை எழுத்து வாங்குவது, அல்லது அச்சடித்த ஒப்பந்தத் தாளில் கையொப்பம் பெறுவது போன்ற முறை ஏதும் கிடையாது. நமது கோரிக்கை நியாயமானது என்று ஏற்றுக்கொண்டவர்களும், நமது துணை தேவை என்று கருதினவர்களும், கடித மூலமும், ஒப்பந்தத்தின் கருத்தைத் 'திராவிட நாடு' இதழில் வெளிபிட்டிருந்ததே அந்த வாசகப்படியும், எழுதித் தமது கையொப்பமிட்டு அனுப்பினார்கள், நன்றியுடன் ஏற்றுக்கொண்டு, மகிழ்ச்சியுடன் அவர்களுக்காகப் பணியாற்றினோம்.

நமக்கும் நம்முடைய ஆதரவைப் பெறுபவர்களுக்கும் இடையே இருக்கவேண்டிய நேசம் எத்தகையது, தொடர்பு எவ்விதமானது, என்பதை உருவாக்கவே, இந்த முறையும் கையாளப்பட்டது. மேலும், புதிய அரசியல் சட்டத்தின்படி நடைபெறும் முதல் தேர்தலில், திராவிட நாடு பிரச்சினை மக்கள் முன் வைக்கப்பட, இது உதவி அளித்தது.

இந்தத் தூய்மையான நோக்கம் சிலருக்குக் கேலிக்குரியதாகத் தெரிந்தது. காரணம், அவர்கள், நம்மைப் போன்றவர்கள் அல்ல, துணையின்றி நெடுவழி போகிற ஆற்றலுள்ளவர்கள். அது வேறு கதை.

ஒப்பந்தம் என்றவுடனே, இது ஒரு பத்திரமாகப் பதிவு செய்யப்படவேண்டியது போலும், என்று எண்ணிக்கொண்டு ஸ்டாம்பு பேப்பரில் எழுதிக் கை எழுத்திட்டு அனுப்பியவர்கள்கூட உண்டு!—அவர்கள்போல, புரியாதவர்களல்லவே மற்றவர்கள்! சிலர், திராவிட நாடு இதழின் வாசகத்தை எழுதிக் கையொப்பமிட்டு அனுப்பினர். சிலர் தமிழில் அல்ல, ஆங்கிலத்திலேயே திராவிட நாடு பிரச்சினையை ஆதரித்து ஒப்பந்தக்கடிதம் அனுப்பினார்கள். நண்பர் மாணிக்கவேலர்—மறந்துவிட்டேன், மந்திரி மாணிக்கவேலர்—அனுப்பிய ஆங்கிலக் கடிதம், அடுத்த இதழில், 'பிளாக்' செய்யப்பட்டு வெளிவருகிறது. இந்தக் கடிதத்தின் தொடர்ச்சியும் வெளிவருகிறது.

அன்று கொள்கையைக் காத்த உங்களுக்கு, என்நன்றியறிதலைக் கூறி, இதனை முடிக்கிறேன். வாலாஜா தோழர்கள், தி. மு. கழகத்தின் கருத்தை, அமைச்சர் அறியும்படிச் செய்ததற்காக, கழகம் நன்றி கூறிக் கொள்கிறது. தொடர்ந்து பத்திரிகையில், முன்கூட்டிய அறிக்கைகள், வேண்டுகோள், விளம்பரம், இவை ஏதும் இல்லை—எனினும், வாலாஜா, ராணிப்பேட்டை, ஆற்காடு, காஞ்சீபுரம், ஆகிய இடங்களிலிருந்து, ஆர்வமிக்க தோழர்கள் கிளம்பி, ஓரேநாளில், ஏற்பாடுகளைச் செய்து, வெற்றி பெற்றுத்தந்தனர். சிலர் சிறைசெல்வார்கள் போலத் தெரிகிறது. பரவாயில்லை! ஆச்சாரியார் மாணிக்கவேலருக்கு மந்திரி வேலையும், நம்மிலே சிலருக்கு, சிறைவாசமும் தருகிறார்! மாணிக்கவேலரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டதை விடக் கொடுமையானதல்ல சிறைவாசம்! செல்வோம்—வெல்வோம்.

அன்பன்,

**அண்ணாதுரை.**

---

— புது வெளியீடுகள்! —

★

**ரோம்** [அரங்கண்ணல்]

[வீரம் ததும்பும் அழகு நூல் தேன், நடை திகட்டாதவிருந்து அறிவுலகத்கான புது நூல்.]

**விடுதலைக் கிளர்ச்சி 1-0-0**

[மு. கருணாநிதி]

**திராவிடப்பண்ணை.**

தெப்பக்குளம் திருச்சி.

---

## கவனியுங்கள்! கவனியுங்கள்!

தி. மு. க. நண்பர்களே!

காஞ்சி நமதியக்கத் தோழரான மு. பாலசுந்தரம் அவர்களின் முருகன் & கோ என்கிற துணிக் கடையிலிருந்து ரூ 25000 மதிப்புள்ள பல பட்டு ரகச்சேலைகள், வெண்பட்டுவகைகள், களவு போயிருக்கின்றன.

இந்த பட்டு வகைகளில் M. B. என்ற சீலும், சிலசேலைகளில் இந்த 'சீல்' இல்லாமலும் இருக்கும்.

எங்காவது தனிப்பட்ட நபர்கள், இத்தகைய பட்டுரகச் சேலைகள் 'பில்' ஏதுவுமின்றி விற்க முயன்றால் தயவு செய்து அவர்களை, அருகே உள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்துவிட்டு நமக்கும் (திராவிட நாடு) தகவல் தருமாறு வேண்டுகிறோம்.

துணிக்கடைகளுக்கும் வந்து இந்த ரகங்களை, களவாடிய நபர்கள் விற்க முயலலாம். வெளியூர் துணிக்கடை நண்பர்கள், சொத்து இழந்து பாதவிக்கும் தோழருக்கு, கள்ளனை பிடிக்க, மேற்குறிப்பிட்டவாறு ஒத்துழைக்கவேண்டுகிறோம்.

"திராவிட நாடு"

காஞ்சிபுரம்.

# கொள்ளிடக்கரையில்! குளிர் நிழற்சோலையில்!!

குபு குபுவென்று காற்று வீச, குலை குலையாக காய்கள் குலுங்க, நிழற் பந்தல் போட்டவாறு நின்ற மரங்களடர்ந்த மாஞ்சோலையிலே, கருத்தைக் கவரும் இளைஞர்கள் ஐம்பது பேர் அமர்ந்திருந்தனர்—தழைகளை ஆசனமாகக் கொண்டு. வெளியே கனல் பறக்கக் காயும் வெய்யிலைப்பற்றிய சிந்தனையின்றி, எதிரே அமர்ந்து தமக்குப் போதனை புரிவோரின் சொற்களிலே கவனத்தையும் கருத்தையும் பதியவைத்துக் கிடந்தனர். இந்தக் காட்சியைக் கண்டபோது, 'நாம் எங்கேயிருக்கிறோம்?' என்று திருப்பிப் பார்த்தேன். என்ன, சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள், என்றார் நண்பர் தர்மலிங்கம். கோடை வெயிலிலே, பூத்துக் குலுங்கும் சோலையினையும், சுந்தரமாக அமர்ந்திருக்கும் இந்த மாணவ மணிகளையும்பற்றி எண்ணினேன் என்றேன். இவ்விதம் நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் 'மணி ஒன்று. இப்போது இடைவேளை' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். நண்பர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன் ஆகிய மூவரும் என்னை நோக்கி வந்தனர். 'ஆசிரியர்களே, சாப்பிடலாமா?' என்றார் திருச்சி மணி. 'ஊம்......ஊம். ஆகட்டும். மத்தியான்ன வகுப்பு ஆரம்பிக்க வேண்டும்' என அவசரப்படுத்தினார் நண்பர் பராங்குசம். எப்போது மேகழக வேலைகள்என்றால் இப்படித்தானே அவர்! சோலைக்குள்ளே, அறுபது பேறுக்கும் அறுசுவை உணவு தரப்பட்டது. உணவு மட்டுமா? தமது கேலிப் பேச்சையும் அன்பையும் சேர்த்துக் கலந்து படைத்தார் அம்பில் தர்மலிங்கம்.

* * *

திருச்சி எப்போதும் முதலிடம் பெறத் துடிக்கும் கழகக் காளைகளைக் கொண்டிருக்கும் மாவட்ட மா[illegible]ர். ''திராவிடப் பண்ணை'' கட்டிடம்—அங்குதான் மாவட்டக் கழக அலுவலகம் உளது—நோக்கிப் போய்விட்டாலே, புளகாங்கிதமாகயிருக்கும். யாராவது நாலு பேர் உட்கார்ந்தவண்ணமும், 'இங்கே கூட்டம் அங்கே காளைக்கு என்று ஏதாவது கழக சம்பந்தமாகத்தான் பேசிக்கொண்டிருப்பர், வெளியூர் நண்பர்களும், மாவட்டக் காரியங்களைக் கவனிப்போரும். இதைக் கண்டு பலமுறை மகிழ்ந்ததுண்டு. அவ்வளவு ஆர்வமுள்ள நண்பர்கள் — கழக அமைப்புகளை உடனடியாகச் செய்யவேண்டுமெனும் ஆசை படைத்தவர்கள். அவர்களின் முயற்சியால், ஈரோடு பொதுக்குழு முடிவுப்படி, மாணவர் பிரச்சாரப் பயிற்சி, நான்கு நாட்கள் நடத்தப்பட்டது. மாணவர்களென்றால் ஒருவர் இருவரல்ல 84 தோழர்கள் விண்ணப்பித்திருந்தனராம் —அவர்களில 48 பேரைத் தேர்ந்தெடுத்த, அவர்களுக்கான பயிற்சி தந்தனர். நான்கு நாட்கள்! 24 வேளைகள்!! அறுபது பேருக்கு!!! உணவுப் பிரச்னை, மனதைக குடைந்ததாம். நண்பர் 'அம்பில்' நானிருக்கிறேன், என முன்வந்தாராம். அவரது பெருத்த ஒத்துழைப்பினால், கொள்ளிடக்கரையிலே, குளிர் நிழச் சோலையிலே, 'வகுப்புகள்' நடைபெற்றன கடந்த 24, 25, 26, 27 ஆகிய தேதிகளில்.

* * *

முதலிரண்டு நாட்களிலும் மாவட்டத் தலைவர்களே, மாணவத் தோழர்களுக்கு, பயிற்சி தந்தனர்.

26-ந் தேதி பிரச்சாரக்குழுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் M A.. சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் தோழர். க. அன்பழகன் M. A., ஆகியோர் வந்து சேர்ந்தனர். ''ஞாயிறு'' இதழ் ஆசிரியர்களில் ஒருவரான தோழர் T. K. சீனுவாசனும் இந்த நல் முயற்சி காணவந்திருந்தார். முற்பகல்—பிற்பகல்—மாலை, ஆகிய நேரங்களில். இந்த மூவரும், வகுப்பு நடத்தினார்கள்.

மறுநாள் மாணவர் கழகச் செயலாளர் தோழர் K. A. மதியழகன், 'திராவிடநாடு' துணை ஆசிரியர் அரங்கண்ணல் ஆகியோர் வந்து, அவர்களும், பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் பற்பல தலைப்புகளில் வகுப்புகள், நடைபெற்றன. 'மாணவர் கடமை' குறித்து தோழர் பராங்குசம், 'கழகமும் நாமும்' என்பது குறித்து தோழர் A. P. தர்மலிங்கமும், 'தொழிலாளர் தொண்டு சம்பந்தமாக தோழர் எம். எஸ். மணியும் பொதுவாக வகுப்புகள் நடத்தினர்.

'அரசியல் வரலாறு' — 'இந்திய அரசியல் வரலாறு'—'கழகவரலாறு' 'நமது இலட்சியம்'—'நாமும் பிறரும்', ஆகிய தலைப்புகளில் தோழர் நெடுஞ்செழியன் வகுப்பு நடத்தினார்.

'சமுதாயம்', 'பொருளாதார பேதம்', 'கழகத்தை வளர்ப்பது எவ்விதம்?' எனும் பொருள்கள் குறித்து தோழர் T K. சீனுவாசன், விளக்கினார்.

'வகுப்புவாரிமுறை', 'திராவிடர்-யார்?', 'இலட்சியம் வளர்ந்தது எப்படி?', 'நாம் செய்ய வேண்டிய கடமை' முதலிய பல தலைப்புகளில் தோழர் அன்பழகன், விரிவுரைகளும் விபரங்களும் தந்தார்.

'வெளிநாடுகளும் நாமும்', 'இந்திய மாகாணங்களும் நமது இடமும்', இந்திய அரசியல் அமைப்பு', 'கழக சட்டதிட்டங்கள்' ஆகியவைகள் குறித்து தோழர் மதியழகன் விளக்கினார்.

'பொது அறிவு' 'பத்திரிகைகளும் மாணவரும்' என்பது குறித்து தோழர் அரங்கண்ணல் எடுத்துரைத்தார்.

* * *

கூடியிருந்த மாணவத் தோழர்களின் பேச்சுத்திறன், நம்மை ஆச்சரியத்திலாழ்த்திற்று. மாவட்டத்தின்

(8-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed & Published by C. N. Annadurai M A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram